©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 4.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 310A] சென்னை, •வெள்ளிக்கிழமை, நவம்பர் 2, 2012
ஐப்பசி 17, திருவள்ளுவர் ஆண்டு - 2043

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

*பக்கங்கள்.*

**பொருளடக்கம்**

**சட்டமுன்வடிவுகள்:**

எண் 55/2012—தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக் கழக (திருத்தச்) சட்டம். 2–3

எண் 56/2012—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டம். 5–11

2012–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2012.**

**2004–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2012–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 9/2005.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2004–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில், (3)–ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் வரம்புரையில், "அறுபத்தைந்து ஆண்டுகள்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "எழுபது ஆண்டுகள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

நீக்கமும் காப்பும்,

தமிழ்நாடு அவசரச் சட்டம் 11/2012.

**3.** (1) 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத் (திருத்த) அவசர சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ, அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க – காரண விளக்கவுரை**

தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரானவர், 2004–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 9/2005), தமது அறுபத்தைந்து வயதினை நிறைவெய்தும் வரை பதவி வகித்தல் வேண்டும். தற்போது அரசானது, கல்வியாளர் பெறும் அறிவானது இம்மாநிலத்தில் உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுக்களை வளம்பெற செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு இயல்விக்கும் வகையில், 2009–ஆம் ஆண்டு மையப் பல்கலைக்கழகங்கள் சட்டத்திற்கு (மையச் சட்டம் 25/2009) இணையாக துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதினை அறுபத்தைந்திலிருந்து எழுபது வயதாக உயர்த்தும் வகையில் மேற்சொன்ன 9/2005 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத் (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 11/2012) 2012–ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 30–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு அது, 2012–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2–ஆம் தேதியிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**என்.ஆர். சிவபதி,**
*பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர்நலன்,*
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/2012.**

**2012—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து மேலும் குறிப்பிட்ட சில தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** இந்தச் சட்டம், 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

**2.** மாநில அரசு, 2012—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுகிற ஐயாயிரத்து அறுநூற்று பதினேழு கோடியே பதினான்கு இலட்சத்து முப்பத்து ஆறாயிரம் ரூபாய்க்கு மேற்படாத மேலுமானதொரு தொகையை— 2012—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக் காகவும் நோக்கங்களுக் காகவும் மாநிலத் தொகு நிதியத்திலிருந்து துணை நிதி ஒதுக்கம் செய்தல்.

(a) இணைப்புப் பட்டியலின் (3)—ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் வழங்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)—ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

## இணைப்புப் பட்டியல்

(2-ஆம் பிரிவைக் காண்க)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுதிநிதியத்தின்மீது சாட்டப்பட்டது | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | 1,000 | 2,000 | 3,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 3 | நீதி நிர்வாகம் | வருவாய் | 20,10,000 | 1,000 | 20,11,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 13,17,62,000 | ... | 13,17,62,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 5 | வேளாண்மைத் துறை | வருவாய் | 876,47,24,000 | ... | 876,47,24,000 |
| | | மூலதனம் | 82,80,000 | ... | 82,80,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 11,96,61,000 | ... | 11,96,61,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 7 | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 22,96,28,000 | ... | 22,96,28,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 8 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 2,000 | ... | 2,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 1,48,90,000 | ... | 1,48,90,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 5,49,03,000 | | 5,49,03,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

## இணைப்புப் பட்டியல்

(2-ஆம் பிரிவைக் காண்க)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுப்பு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 11 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 3,000 | ... | 3,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | .. | ... | ... |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | .. | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 14,03,000 | ... | 14,03,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 14 | எரிசக்தித் துறை | வருவாய் | 2,042,54,00,000 | ... | 2,042,54,00,000 |
| | | மூலதனம் | ... | ... | . |
| | | கடன் | 1,000,00,01,000 | ... | 1,000,00,01,000 |
| 15 | நிதித் துறை | வருவாய் | 11,42,08,000 | ... | 11,42,08,000 |
| | | மூலதனம் | ... | .. | ... |
| | | கடன் | 10,00,00,000 | ... | 10,00,00,000 |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 197,57,00,000 | ... | 197,57,00,000 |
| | | மூலதனம் | ... | .. | ... |
| | | கடன் | 6,23,00,000 | ... | 6,23,00,000 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | . | ... |
| | | கடன் | 10,00,00,000 | ... | 10,00,00,000 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | வருவாய் | 26,000 | ... | 26,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 20 | உயர் கல்வித் துறை | வருவாய் | 5,000 | ... | 5,000 |
| | | மூலதனம் | 30,00,000 | *1,50,85,000* | 1,80,85,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 21 | நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | வருவாய் | 2,000 | ... | 2,000 |
| | | மூலதனம் | 24,000 | ... | 24,000 |
| | | கடன் | ... | ... | ... |

## இணைப்புப் பட்டியல்

(2-ஆம் பிரிவைக் காண்க)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்தின்மீது சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) (ரூ.) | (4) (ரூ.) | (5) (ரூ.) |
| 22 | காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 4,10,65,000 | ... | 4,10,65,000 |
| | | மூலதனம் | 1,000 | .. | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 13,96,60,000 | ... | 13,96,60,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 3,05,79,000 | ... | 3,05,79,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | .. | . |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் — நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 5,000 | ... | 5,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | வருவாய் | 1,01,81,000 | ... | 1,01,81,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 36,48,00,000 | ... | 36,48,00,000 |
| 27 | தொழில் துறை | வருவாய் | 39,74,000 | 97,42,000 | 1,37,16,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | 353,08,00,000 | .. | 353,08,00,000 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 19,02,40,000 | . | 19,02,40,000 |
| | | மூலதனம் | 90,00,000 | ... | 90,00,000 |
| | | கடன் | ... | | ... |
| 29 | சுற்றுலா — கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | வருவாய் | 15,97,000 | .. | 15,97,000 |
| | | மூலதனம் | 1,00,02,000 | .. | 1,00,02,000 |
| | | கடன் | ... | ... | . |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு — (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | 6,50,00,000 | | 6,50,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | . | ... |
| | | கடன் | ... | ... | .. |

## இணைப்புப் பட்டியல்

(2-ஆம் பிரிவைக் காண்க)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திலிருந்துச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | வருவாய் | 6,62,75,000 | ... | 6,62,75,000 |
| | | மூலதனம் | 4,000 | ... | 4,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 34 | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 2,23,78,000 | ... | 2,23,78,000 |
| | | மூலதனம் | 373,36,02,000 | .. | 373,36,02,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 35 | பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை | வருவாய் | 2,94,28,000 | 27,28,99,000 | 30,23,27,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 6,000 | ... | 6,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 1,00,00,000 | ... | 1,00,00,000 |
| | | மூலதனம் | ... | .. | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 38 | பொதுத் துறை | வருவாய் | 7,05,000 | .. | 7,05,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | .. |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | வருவாய் | 1,50,24,000 | ... | 1,50,24,000 |
| | | மூலதனம் | 1,33,19,000 | .. | 1,33,19,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 40 | பாசனம் — (பொதுப் பணித் துறை) | வருவாய் | 6,000 | ... | 6,000 |
| | | மூலதனம் | 32,000 | ... | 32,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 41 | வருவாய்த் துறை | வருவாய் | 8,33,09,000 | 12,28,06,000 | 20,61,15,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | . |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | வருவாய் | 152,89,71,000 | ... | 152,89,71,000 |
| | | மூலதனம் | 3,000 | ... | 3,000 |
| | | கடன் | ... | ... | ... |

## இணைப்புப் பட்டியல்

(2-ஆம் பிரிவைக் காண்க)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுப்பு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | வருவாய் | 13.000 | ... | 13.000 |
| | | மூலதனம் | 3,000 | ... | 3,000 |
| | | கடன் | .. | .. | ... |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | வருவாய் | 9,000 | ... | 9.000 |
| | | மூலதனம் | 3,000 | ... | 3,000 |
| | | கடன் | .. | ... | ... |
| 45 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | வருவாய் | 127,24,67,000 | ... | 127,24,67,000 |
| | | மூலதனம் | ... | ... | .. |
| | | கடன் | ... | ... | ... |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 2,01,52,000 | ... | 2,01,52,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 48 | போக்குவரத்துத் துறை | வருவாய் | 200,00,01,000 | ... | 200,00,01,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1.000 |
| | | கடன் | 13.91.00,000 | ... | 13,91,00,000 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 3,86,02,000 | ... | 3,88,02,000 |
| | | மூலதனம் | .. | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | 2,000 | 1,000 | 3,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | வருவாய் | 23,97,80,000 | ... | 23,97,80,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | வருவாய் | 6,000 | ... | 6,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

## இணைப்புப் பட்டியல்

(2–ஆம் பிரிவைக் காண்க)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | வருவாய் | 1,26,51,000 | ... | 1,26,51,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |
| | கடன் செலவுகள் | வருவாய் | ... | *1,000* | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | பொதுக் கடன் – திருப்பிச் செலுத்துதல் | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | .. | *1,000* | 1.000 |
| | மொத்தம் | வருவாய் | 3,761,16,09,000 | *40,54,52,000* | 3,801,70,61,000 |
| | | மூலதனம் | 384,22,87,000 | *1,50,85,000* | 385,73,72,000 |
| | | கடன் | 1,429,70,02,000 | *1,000* | 1,429,70,03,000 |
| | பெருமொத்தம் | | 5,575,08,98,000 | *42,05,38,000* | 5,617,14,36,000 |

### நோக்க—காரண விளக்கவுரை.

இச்சட்ட முன்வடிவானது—

(a) 2012—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) அந்த ஆண்டிற்கான, மாநிலத் தொகுநிதியத்தின்மீது சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகையை மாநிலத் தொகு நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204—ஆம் உறுப்பின் (1)—ஆம் கூறுடன் இணைத்துப் பொருள் கொள்ளப்பட வேண்டிய 205—ஆம் உறுப்பினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

ஓ.பன்னீர்செல்வம்,
நிதி அமைச்சர்.

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.